DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–53/2025

Prosecution witness – PW 4

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.வேல் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present.)
09.04.2026– 12.50 PM

முதல் விசாரணை:–

1. நான் சிறைக்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன்.

2. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு 07.00 மணியளவில் சிறைக்குளம் மேற்குத்தெருவில் உள்ள சர்சுக்கு பின்னால் தினகரனும், முனியசாமியும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். சிறைக்குளத்தைச் சேர்ந்த ஆறுமுகமும், நானும் சண்டையை விலக்கிவிட்டோம். முனியசாமியை தினகரன் அடித்து விட்டார். நாங்கள் முனியசாமியை அழைத்துசென்று விட்டோம். இந்த சம்பவம் தொடர்பாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –**

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை எங்கு வைத்து, எத்தனை நாள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் சிறைக்குளம் கிராமத்தில் வைத்து அதிகாலை 03.00 மணிக்கு விசாரித்தார்கள். என்னை விசாரித்த அதிகாரி சார்பு ஆய்வாளரா, அல்லது முதல் நிலைக்காவலரா என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். எதிரிக்கும்

புகார்தாரருக்கும் சண்டை எந்த விவரத்திற்காக நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு போகும் போது புகார்தாரருக்கு பின்னால் 1 வது எதிரி தினகரன் நின்று கொண்டிருந்தார்.

தினகரன் புகார்தாரரரை உடம்பில் எந்த பகுதியில் தாக்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கின் புகார்தாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது சித்தப்பா மகன் ஆவார். இந்த வழககின் புகார்தாரரும், நானும் ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரிகளும், நானும், வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் எனக்கு சித்தப்பா மகன் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில நான் இல்லை என்றும், எதிரிகள் புகார்தாரரை எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.04.09 18:34:05 +0000